**2019 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 09.10.2019 ம் தேதி புதன் கிழமை காலை 10.30 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற இயல்புக் கூட்டப் பொருள்**

1) திண்டுக்கல் மாநகராட்சிக்கு சொந்தமான அடியனூத்து உட்கடை கிராமம் ஒடுக்கத்தில் உள்ள கிராம புல எண்கள். 561, 562, 563, 564, 565, 567, 568, 569, 570,571 மற்றும் 572 முடிய உள்ள 20 ஏக்கர் அதாவது (8.61.0) ஹெக்டேர் காலியிடத்தில் மருத்துவ கல்லூரி கட்ட , சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறைக்கு நிலமாற்றம் செய்யும் பொருட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண். 25620/2019/டி4, நாள். 04.10.2019,தேதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. மேற்படி இடம் திண்டுக்கல் நகராட்சியால் குடிநீர் திட்டத்திற்கு 1901-ம் ஆண்டு கட்டாய நில எடுப்பு திட்டத்தின் கீழ் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு நகராட்சி பெயரில் அரசாணை எண். 4911- A – 26, நாள். 17.02.1927-ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டு தற்பொழுது மாநகராட்சியின் கட்டுபாட்டில் உள்ளது. உள்ளாட்சி துறை, மாநகராட்சி நகராட்சி நிர்வாகத்திற்கு கட்டுப்பட்ட இடங்களை வேறுத்துறைக்கோ அல்லது தனிநபர்களுக்கு வழங்குவதற்கு அரசு ஆணை எண். 730, நாள். 17.04.1976-ல் தடை விதிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி இடத்தினை நில ஆர்ஜிதம் மூலம் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு நில கிரையத்தொகை மற்றும் இழப்பீடு தொகையினை மாநகராட்சிக்கு அரசு நிர்ணயம் செய்து வழங்கும் நிலையில் நகராட்சி இடங்களை பிற துறைக்கோ, அல்லது தனியாருக்கோ வழங்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( மா.ந.2) துறை அரசாணை (நிலை) எண். 35, நாள். 17.02.1997 மற்றும் அரசாணை (நிலை) எண். 25, நாள். 25.02.2000 இவற்றின் படி சந்தை விலை அடிப்படையில் நில மாற்றம் செய்யலாம் என அரசுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக கருத்துரு அனுப்பலாம். மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண். 25620/2019/டி4, நாள். 04.10.2019, மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு..**

திண்டுக்கல் மாநகராட்சிக்கு சொந்தமான அடியனூத்து உட்கடை கிராமம் ஒடுக்கத்தில் உள்ள கிராம புல எண்கள். 561, 562, 563, 564, 565, 567, 568, 569, 570,571 மற்றும் 572 முடிய உள்ள 20 ஏக்கர் (8.61.0) ஹெக்டர் காலியிடத்தில் மருத்துவ கல்லூரி கட்ட நில மாற்றம் செய்யக்கோரும் கருத்துரு தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் மூலம் அரசுக்கு சந்தை விலை நிர்ணயப்படி மருத்துவக்கல்லூரிக்கு இட ஒதுக்கீடு மற்றும் நில மாற்றம் செய்யவும், ஒப்புதல் பெறவும் கருத்துரு அனுப்பவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 11016/2019/F1)**

2) திண்டுக்கல் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முதற்கட்டமாக வார்டு எண். 2,3,4,5,6,7,8,9,11 (பகுதி) 12,13,14,15,16 18(பகுதி) 19,20,21,22(பகுதி) 24,25,26,27,28(பகுதி) மற்றும் 38 (பகுதி)-ல் பாதாள சாக்கடை அமைப்பு ஏற்படுத்தும் பணியும், பொன்மாந்துரை, பள்ளப்பட்டி கிராமத்தில் 13.65 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியும் அமைக்க உத்தேசிக்கப்பட்டு அதற்கான திட்டப்பணிக்கு திருத்திய நிர்வாக அனுமதியாக ரூ.46.15 கோடிக்கு அரசாணை எண். 554-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு அப்பணி மூன்று சிப்பங்களாக (சிப்பம் I, II, III) மேற்கொள்ளப்பட்டு சிப்பம் I & II (கழிவுநீர் சேகரிக்கும் அமைப்பு) சிப்பம் III (கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ) பணிகள் முடிவடைந்து செயல்பாட்டில் உள்ளது. மேலும் சிப்பம் I மற்றும் சிப்பம் II –ல் பணிகள் முடிக்கப்பட்டு வீட்டு இணைப்புகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

சிப்பம் III-ல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டுமான பணிகள் M/s. பியூர் என்விரோ இன்ஜினியரிங்க பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள தொகை ரு. 10.34 கோடியில் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு பிப்ரவரி 2013-ல் இருந்து ஆறு மாத காலம் சோதனை ஓட்டம் முடிவுற்று 06.11.2013-லிருந்து 5 வருடம் இயக்கதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்படி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட நிறுவனத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான 5 வருட ஒப்பந்தம் 30.11.2018 வுடன் முடிவடைந்தது மேற்கண்ட ஒப்பந்ததாரர் மூலம் ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் ஒரு வருடத்திற்கு அதாவது 01.12.2018 முதல் 30.11.2019 வரை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் பார்க்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணி 30.11.2019-ல் முடிவடைவதால் மேற்படி சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குவதற்கு போதிய பணியாளர்கள் இம்மாநகராட்சியில் இல்லாததால் 01.12.2019 முதல் 30.11.2020 வரை ஓராண்டிற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரரை நியமிக்க ஒப்பந்தப்புள்ளி கோரவும் மற்றும் மேற்கண்ட ஆண்டிற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்திற்கு தொகை வழங்க, ( TWAD & PWD) விலை விகித அடிப்படையில் மதிப்பீடு ரு. 27.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. அப்பணிகளுக்கான செலவினத்திற்கும் ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 11411/201/இ4(பா.ச.தி)**

அலுவலக குறிப்பு..

மேற்படி செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

3) தமிழ் வளர்ச்சி துறை தமிழ் ஆட்சி மொழி, தமிழ் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 20.12.2018 அன்று தலைமைச்செயலகத்தில் தமிழ்வளர்ச்சி துறை அலுவலர்களுடன் உண்டான ஆய்வு கூட்டத்தில் மாவட்ட தலை நகரங்களில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் உள்ள முதன்மை சாலைக்கு தமிழ்சாலை என பெயர் சூட்டி தீர்மானம் நிறைவேற்ற ஆய்வு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, மாவட்ட ஆட்சியர் அவர்களின் 01.10.2019 –ம் தேதிய கடிதம் ந.க.எண். 281/2019, திண்டுக்கல் மாநகராட்சிக்கு கட்டுப்பட்ட முதன்மை சாலைக்கு தமிழ்சாலை என பெயர் சூட்டி அறிக்கை செய்ய தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது. **(ந.க.எண். 10731/2019/F1)**

**அலுவலக குறிப்பு..**

தமிழ் வளர்ச்சி துறை அவர்களால் தெரிவிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரத்தின்படி திண்டுக்கல் மாநகராட்சி அலுவலகத்திற்கு முன்புறம் (வடக்கு பக்கம்) உள்ள மெயின் ரோடு பெரியார் சிலை முதல் வெள்ளை விநாயகர் கோவில் வரை அமைந்துள்ள சாலைக்கு தமிழ்சாலை என பெயர் சூட்ட மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

4) திண்டுக்கல் மாநகராட்சி காமராஜர் பேருந்து நிலையத்தில் உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதியின் கீழ் அபிவிருத்தி பணிகள் ஏற்கனவே பெறப்பட்ட தொழில்நுட்ப வரைபடத்தின் படி பணிகள் நடைபெற்று வருவதில் பேருந்துகள் வெளியேறும் வழி மாற்றம் செய்து பணிகள் மேற்கொள்ள 28.11.2018-ம் தேதிய தீர்மானம் எண். 1339 எண்ணில் மாமன்றம் ஒப்புதல் பெற்று திருத்திய தொழில்நுட்ப அனுமதி கோரி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டதில் மின்னணு வளர்ச்சி கட்டுப்பாடு நெறிமுறைகளின் படி வரைபடம் தயார் செய்தும் நிலையிலுள்ள கட்டிடங்களுக்கு கட்டிடத்தின் உறுதித்தன்மை சான்று பெற்றும் நகர் ஊரமைப்பு துறைக்கு கணினியின் மூலம் விண்ணப்பம் பதிவேற்றம் செய்ய நகர் ஊரமைப்பு துறையினரால் தெரிவிக்கப்பட்டது.

அதன்பேரில் மேற்படி பணி அத்தியவசியமாக பணியாக உள்ள காரணத்தாலும் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுல்படுத்தபட்ட காரணத்தால் ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலைப்புள்ளிகள் பெற இயலாத காரணத்தில் அவசர அவசியம் கருதி பிரிவு 15-ன் கீழ் பணிகள் மேற்கொள்ள SPD பில்டர்ஸ் நிறுவனத்திற்கு பணி ஒப்படைக்கப்பட்டு பணிகள் முடிவுற்றது. மேலும், மேற்படி நிறுவனத்திற்கு ரூ.97,000/-

பட்டுவாடா செய்யப்பட்டது. மேலும், ரூ.7,200/- நகர் ஊரமைப்பு துறைக்கு நன்னிலை வரி செலுத்தப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்பட்டது.

**(ந.க.எண். 15055/2018/எப்1)**

அலுவலக குறிப்பு..

1. தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுல்படுத்தப்பட்ட காரணத்தால் ஒப்பந்தபுள்ளி மற்றும் விலைபுள்ளிகள் பெறாமல் பிரிவு 15-ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேலும், SPD பில்டர்ஸ் நிறுவனத்திற்கு ரூ. 97,000/- மற்றும் நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் மதுரை அவர்களுக்கு ரூ. 7,200/- நன்னிலை வரி பட்டுவாடா செய்யப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

---

5) திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட திருவள்ளுவர் ரோடு, இ.பி. காலனி, நகரளவு எண். 1111/3, -ல் மதுரை வீட்டு வசதி வாரியத்தால் மனை பிரிவு அங்கீகாரம் பெறப்பட்ட மனைப்பிரிவு அனுமதி எண். LP/R (MR) NO. 23/82-ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட பூங்கா மற்றும் குழந்தைகள் விளையாடும் இடம் (வார்டு எண். 6, பிளாக் எண். 57, நகரளவு எண். 93-ல் கண்ட 479.80 ச.மீ) வீட்டு வசதி வாரியத்தால் முறையாக ஆவண எண். 1051/2016, நாள். 15.04.2016 மாநகராட்சிக்கு ஒப்புடைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, பூங்காநிலம் எவ்வித அபிவிருத்தி பணிகளும் செய்யப்படாமல் காலிடமாக உள்ளது. இம்மனைப்பிரிவில் உள்ள மின்வாரிய குடியிருப்போர் நலபாதுகாப்பு சங்கம், மேற்படி பூங்கா நிலத்தினை அப்பகுதி மக்கள் பயன்படுத்தும் வகையில் அபிவிருத்தி பணிகள் செய்து பராமரிப்பு செய்து வர அனுமதி கோரியுள்ளார்கள். மேற்படி, பூங்கா மற்றும் சிறுவர்கள் விளையாட்டு திடலை மின்வாரிய குடியிருப்போர் நலபாதுகாப்பு சங்கம் மூலம் அபிவிருத்தி செய்து பராமரித்து வர அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. **(ந.க.எண். 8202/2019/எப்1)**

அலுவலக குறிப்பு..

மாநகராட்சி விதிக்கும், நிபந்தனைக்களுக்குட்பட்டு அபிவிருத்தி செய்து பராமரித்து வர அனுமதிக்கலாம்.

---

6) திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ஆர்.எஸ். ரோட்டில் இயங்கி வரும் TANTEA கடையினை பென்சர் காம்பவுண்ட் தெருவில்

ராஜஜேஸ்வரி மருத்துவமனை தென்புறம் உள்ள இடத்திற்கு TANTEA கடையை மாற்றி அமைக்க அனுமதி கோரப்பட்டுள்ளது. மேற்படி, கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.2018/2018/F3)**

**அலுவலக குறிப்பு..**

திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ஆர்.எஸ். ரோட்டில் இயங்கி வரும் TANTEA கடையினை பென்சர் காம்பவுண்ட் தெருவில் ராஜராஜேஸ்வரி மருத்துவமனை தென்புறம் உள்ள இடத்திற்கு TANTEA கடையை மாற்றி அமைக்க நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ஒப்புதல் பெறும்பொருட்டு கருத்துரு அனுப்பவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

7) திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 48 வார்டுகளில் அனைத்து கட்டிடங்களுக்கும் மழைநீர் சேகரிப்பு அமைப்பும் (தனியார் கட்டிடங்களிலும், அரசு கட்டிடங்களிலும், கல்வி கூடங்களிலும், தொழிற்சாலைகளையும்) மழைநீர் சேகரிப்பு தொட்டி அமையப் பெற்றதன் விபரம் ஆகியவற்றை வாரந்தோறும் அறிக்கையாக சமர்பிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின், Weekly Status Report on Rain Water Harvesting Structure, நாள். 27.06.2019 அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அது தொடர்பாக மேற்கண்ட இடங்களுக்கு நேரடியாக சென்று ஆய்வு செய்து உரிமையாளர்களுக்கு தக்க ஆலோசனை வழங்கி மழைநீர் சேகரிப்பு அமைப்பு இல்லாத வீடுகளுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு வருவதற்கும், நல்ல நிலைமையில் உள்ள மழைநீர் சேகரிப்பு செயல்பட்டு வரும் இடங்களில் ஸ்டிக்கர் ஒட்டி வரவும் களப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி மேற்கொள்ள அறிவிப்பு (Notice) 15,000/- ஸ்டிக்கர் 10,000 எண்ணமும், வீடுகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக ஆய்வு செய்த பணியை பதிவேட்டில் பதிந்து மக்களிடையே கையொப்பம் பெற்றுவர 1 குயர் பதிவேடு (QUOR REGISTER) 100 எண்ணம் பதிவேடுகள் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி அச்சடித்து வழங்க மேலாண்மை இயக்குநர், திண்டுக்கல் மாவட்ட எழுதுப்பொருள்கள் தயாரிக்கும் மற்றும் தையல் மகளிர் மேம்பாட்டு தொழிற்கூட்டுறவு சங்கம், திண்டுக்கல். அச்சகத்திற்கு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினங்களுக்கு உத்தேச செலவினமாக ரூ. 1,50,000/- (ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) செலவிட அனுமதி வேண்டப்படுகிறது. அதன்விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.6852/2016/F3)**

**அலுவலக குறிப்பு..**

மேற்கண்ட செலவினங்களுக்கு உத்தேச கட்டணமாக ரூ.1,50,000/- பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

8) **அரசாணை எண்.222 நிதி (ஓய்வூதியம்) துறை நாள் 30.06.2018ன்படி ஜீலை 2018 முதல் அரசு ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத் துணை உட்பட) மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் அமல்படுத்தப் பட்டுள்ளது. மேற்படி அரசாணை பத்தி எண் 5(6)ல் உள்ளாட்சி நிறுவனங்களில் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெற்று வரும் ஓய்வூதியதாரர்களும் இத்திட்டத்தில் இணைய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், அவ்வாறு மேற்கொள்ளப்படும் உடன்படிக்கை நாளது தேதி முதல் இக்காப்பீட்டுத் திட்டத்தின் பயன்கள் மாநகராட்சி ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் பெற இயலும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**இந்நிலையில் அரசாணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 28.05.2019ல் முதல் வருட காப்பீட்டுத் தொகையினை SFC மானியத்தில் பிடித்தம் செய்யவும் மாநகராட்சி ஆணையர்கள் காப்பீட்டு நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொண்டு காப்பீட்டுத் தொகை செலுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது.**

**எனவே,**

1) **திண்டுக்கல் மாநகராட்சியில் தற்பொழுது 119 நபர்கள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். 19 நபர்கள் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். மேற்படி ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து மாத சந்தாவாக ரூ. 350/- பிடித்தம் செய்யலாம்.**
2) **அரசாணை எண்.222 நிதி (ஓய்வூதியம்) துறை நாள் 30.06.2018ல் புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 2018ன்படி காப்பீட்டு நிறுவனத்திற்கு ஒரு வருடத்திற்கு நபர் ஒருவருக்கு ரூ.3800/- மற்றும் GST 18% ரூ.684/- சேர்த்து ரூ.4484/- செலுத்தப்பட வேண்டும். அதன்படி இம்மாநகராட்சி**

ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் 138 நபர்களுக்கு 138Xரூ.4484 = ரூ.6,18,792/- காப்பீட்டு நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டும்.

3) ஓய்வூதியர் நபர் ஒருவருக்கு மருத்துவ நல நிதி சந்தாவாக ரூ.350/- வீதம் 12 மாதங்களுக்கு ரூ.350X12 = ரூ.4200/- என்ற அடிப்படையில் 138 நபர்களுக்கு ரூ.4200/-X138 = ரூ.5,79,600/- மட்டுமே பிடித்தம் செய்யப்படுவதால், கூடுதலாகும் தொகை (ரூ.618792-ரூ.579600)= ரூ.39,192/- ஐ இம்மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலுத்தலாம்.

4) யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்திடம் உடன்படிக்கை செய்து கொள்ளவும், மேற்குறிப்பிட்டுள்ள தொகை ரூ.6,18,792/-ஐ மேற்படி காப்பீட்டு நிறுவனத்திற்கு செலுத்தவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.10064/2018/பி2).

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. அரசாணையின்படி திண்டுக்கல் மாநகராட்சி ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்த மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. அக்டோபர் 2019 மாதம் முதல் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களிடம் மாத சந்தாவாக ரூ.350/- பிடித்தம் செய்யலாம்.

5) ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து ஓராண்டில் பிடித்தம் செய்யப்படும் மொத்த தொகையினை விட காப்பீட்டு நிறுவனத்திற்கு செலுத்தப்படும் கூடுதல் தொகையினை மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்கவும் அனுமதிக்கலாம்.

6) முதல் வருட காப்பீட்டுத் தொகையினை காப்பீட்டு நிறுவனத்திற்கு வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலுத்துவதற்கும் அனுமதிக்கலாம்.

7) மாமன்ற அனுமதியினை எதிர் நோக்கி தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

---

9) திண்டுக்கல் மாநகராட்சிக்கு 2019-20ம் ஆண்டிற்கு தேவையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் எழுதுபொருட்கள் மற்றும் கணினி உபகரணங்கள் ஆகியவற்றை ஒப்பந்தப்புள்ளி கோரி கூட்டுறவு அச்சகம் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களில் வாங்கிக் கொள்வதற்கு இம்மாமன்ற தீர்மான எண்.1601 நாள் 28.06.2019ம் தேதிய தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி இம்மாநகராட்சிக்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்கு 26.09.2019ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்மூலம் கீழ்க்கண்ட மூன்று கூட்டுறவு சார்ந்த நிறுவனங்களிலிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

| வ.எண் | விபரம் | விலைப்பட்டியல் |
|---|---|---|
| 1 | திண்டுக்கல் மாவட்ட எழுதுபொருட்கள் தயாரிக்கும் மற்றும் தையல் மகளிர் மேம்பாட்டு தொழிற் கூட்டுறவு சங்கம் S.W.88, திண்டுக்கல் | ரூ.3,18,527.95 |
| 2 | அறிஞர் அண்ணா எழுதுபொருட்கள் தயாரிக்கும் மற்றும் தையல் மகளிர் மேம்பாட்டு தொழிற் கூட்டுறவு சங்கம் லிட் இண்ட் 1090, சிட்கோ தொழிற்பேட்டை, மதுரை. | ரூ.3,28,990.10 |
| 3 | ம. ரெட்டியபட்டி அச்சகம் (ம) எழுதுபொருட்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் தையல் மகளிர் மேம்பாட்டு தொழிற் கூட்டுறவு சங்கம், ச.ந.84, ம. ரெட்டியபட்டி, விருதுநகர் மாவட்டம்-626 118. | ரூ.3,22,051.90 |

மேற்படி வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திண்டுக்கல் மாவட்ட எழுதுபொருட்கள் தயாரிக்கும் மற்றும் தையல் மகளிர் மேம்பாட்டு தொழிற் கூட்டுறவு சங்கம் S.W.88, திண்டுக்கல்

**நிறுவனத்திடமிருந்து 2019-20ம் ஆண்டிற்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொள்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண்.6828/2019/டி1)**

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

**ஒப்புதல் வழங்கலாம்.**

---

**10)** திண்டுக்கல் மாநகராட்சி நேருஜி நினைவு மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் தற்போது ரூ.150.00 இலட்சம் மொத்த மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. இப் பள்ளியினை நேரில் ஆய்வு செய்த மாநகராட்சி ஆணையர் அவர்கள் ஏற்கனவே உள்ள A/c சீட் வகுப்பறையினை மாணவருக்கான சத்துணவருந்தும் அறை மற்றும் வகுப்பறை அமைக்க அறிவுறுத்தினார்கள். அதன்படி மேற்படி A/c சீட் வகுப்பறையினை கான்கீரிட் கட்டிடமாக மாற்றி கூடுதல் அபிவிருத்தி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட ரூ.18.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண். 271 / 2013/ இ 4)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) மாநகராட்சி கல்வி நிதி 2019-20 ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**11)** திண்டுக்கல் மாநகராட்சி மேட்டுப்பட்டி மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் உள்ள மூன்று வகுப்பறைகளின் தரைத் தளம் முற்றிலும் சேதமடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேலும் அவ்வகுப்பறைகளில் தமிழ்க அரசால் HIGH TECH LAB

அமைப்பதற்கான LAB THINGS, CCTV CAMERA, WIFI வசதியினை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அவ்வகுப்பறைகளை சீர் செய்து தரும்படி கோரப்பட்டதற்கிணங்க வகுப்பறைகளை அபிவிருத்தி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட ரூ.2.30 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

( ந.க.எண். 271 / 2013/ இ 4)

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) மாநகராட்சி கல்வி நிதி 2019-20 ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**12)** திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 37 கருவூல சாலை ரோட்டில் (மேட்டுப்பட்டி ரோடு) ஆழ்துளைக் கிணறு அமைத்து சிறு மின்விசை இறைப்பான் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட ரூ.3.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண். 10916 / 2019/ இ 4)

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) குடிநீர் நிதி 2019-20 ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**13)** இம்மாநகராட்சியில் பொது நிதி 2019-2020 ன் கீழ் பொறியியல் பிரிவுக்கு பல்வேறு அலுவலகப் பணிகள் மேற்கொள்ள கணினி மூலம் தமிழ் மற்றும் ஆங்கில வழியில் தட்டச்சு மற்றும் இதர வடிவமைப்பு பணி

மேற்கொள்ளும் வகையிலான தட்டச்சர் 1 எண்ணம் Out Sourcing மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களால் 2019-20 ல் நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதிய அடிப்படையில் (1.10.2019 முதல் 30.09.2020 வரை – 12 மாதங்கள்) சப்ளை செய்யும் பணிக்கு 23.08.2019 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ. எண் | ஒப்பந்தக்காரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத்தொகை |
|---|---|---|---|
| 1. | ஜெகதீஸ்வரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.1600/- மதிப்புள்ள தேசிய சேமிப்பு பத்திரம் |
| 2. | திரு.பி. முருகேசன் | 0.79% மதிப்பீட்டிற்கு கூடுதல் | -- |

(ந.க.எண்.10312 /2013/ இ3)

<u>**அலுவலக குறிப்பு**</u>

1. ரூ.1,60,000/- மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப்பணிக்கு மாமன்றத் தீர்மான எண். 1643, நாள் 10.07.2019 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஜெகதீஸ்வரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தகாரர் ஜெகதீஸ்வரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

---

**14)** திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 47 சுண்ணாம்பு காளவாசல் தெருவில் கழிவு நீர் செல்ல வடிகால் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட ரூ.3.50 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண். 271 / 2013/ இ 4)

<u>**அலுவலக குறிப்பு**</u>

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) பொது நிதி 2019-20 ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

15) திண்டுக்கல் மாநகராட்சியில் நகரில் விடுபட்ட பகுதிகளில் பகிர்மானக் குழாய் பதிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட ரூ.25.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண். 271 / 2013/ இ 4)

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் நிதி 2019-20 ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள முன் அனுமதி வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

16) திண்டுக்கல் மாநகராட்சிக்கு பழனி சாலையில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு வெளிச் செல்லும் வழி குழாய் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட ரூ.25.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

( ந.க.எண். 271 / 2013/ இ 4)

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் நிதி 2019-20 ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள முன் அனுமதி வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

17) திண்டுக்கல் மாநகராட்சிக்கு பழனி சாலையில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு உள் செல்லும் வழி குழாய் அமைக்கும் பணிக்கு ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யக் கோரியும், ஷை பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டியும் மாண்புமிகு வனத்துறை

அமைச்சர் அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டது. அக் கோரிக்கைக்கிணங்க மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2019-2020 ன் கீழ் ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 3681 / 2019/ அ5, நாள் 19.09.2019ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

( ந.க.எண். 271 / 2013/ இ 4)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மாமன்றம் பதிவு செய்யலாம்
2) ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**18) அரசாணை நிலை எண். 29, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 8.3.2019 ன்படி பிரதம மந்திரியின் ஜன் விகாஸ் கயாகிராம் திட்டத்தின் கீழ் சிறுபான்மையினர்அதிகம் வசிக்கும் பகுதியாக திண்டுக்கல் மாவட்டத்தில் திண்டுக்கல் மாநகராட்சி கண்டறியப்பட்டுள்ளது. அதன்படி , பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், திண்டுக்கல் அவர்கள் அலுவலக ந.க.எண். 36181 / 2018 / ஐ 7எண்ணிட்ட 19.7.2019ம் தேதியிட்ட கடிதத்தில் அப்பகுதிகளில் செயல்படுத்தப்பட வேண்டிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்த ஏதுவாக மாநகராட்சி மூலம் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து முன்மொழிவுகள் அனுப்ப கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி திண்டுக்கல் மாநகராட்சியில் ரூ.990.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட கீழ்க்கண்ட திட்டப் பிரேரணைக்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.**

**<u>I. அங்கன்வாடி மையம் கட்டும் பணி</u>**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | செல்லாண்டியம்மன் கோவில் தெருவில் அங்கன்வாடி மையம் | 15.00 |

| | | |
|---|---|---|
| | கட்டும் பணி | |
| 2 | கருணாநிதி நகரில் அங்கன்வாடி மையம் கட்டும் பணி | 15.00 |
| 3 | குமரன் திருநகரில் அங்கன்வாடி மையம் கட்டும் பணி | 15.00 |
| 4 | ஆரோக்கியமாதா தெரு, வி.எம்.ஆ.பட்டியில் அங்கன்வாடி மையம் கட்டும் பணி | 15.00 |
| 5 | ஆரோக்கியமாதா தெரு, போடிநாயக்கன் பட்டியில் அங்கன்வாடி மையம் கட்டும் பணி | 15.00 |
| 6 | மேற்கு மரியநாதபுரம் புதுத் தெருவில் அங்கன்வாடி மையம் கட்டும் பணி | 15.00 |
| 7 | பூச்சிநாயக்கன்பட்டியில் அங்கன்வாடி மையம் கட்டும் பணி | 15.00 |
| 8 | மேற்கு ரதவீதி, காமராஜபுரத்தில அங்கன்வாடி மையம் கட்டும் பணி | 15.00 |
| | **மொத்தம்** | **120.00** |

**II. சமுதாயக் கூடம் கட்டும் பணி**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | மார்க்கெட் குமரன் தெருவில் சமுதாயக் கூடம் கட்டும் பணி | 75.00 |
| 2 | கக்கன் நகரில் சமுதாயக் கூடம் கட்டும் பணி | 75.00 |
| | **மொத்தம்** | **150.00** |

**III. மாநகராட்சி பள்ளிகளில் கூடுதல் வகுப்பறை கட்டும் பணி**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | நேருஜி நினைவு மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டும் பணி | 300.00 |
| 2 | மேற்கு ரத வீதி ஆரம்பப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டும் பணி | 50.00 |
| 3 | பூச்சிநாயக்கன்பட்டி ஆரம்பப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டும் பணி | 50.00 |

| | | |
|---|---|---|
| 4 | மேட்டுப்பட்டி உயர்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டும் பணி | 50.00 |
| 5 | மேட்டுப்பட்டி ஆரம்பப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டும் பணி | 50.00 |
| 6 | பாறைப்பட்டியில் ஆரம்பப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டும் பணி | 50.00 |
| | **மொத்தம்** | **550.00** |

## IV. துணை சுகாதார மையங்கள் கட்டும் பணி

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | மரியநாதபுரம் பழைய மகப்பேறு மையத்தில் துணை சுகாதார நிலையம் கட்டும் பணி | 30.00 |
| 2 | சந்தை ரோடு நுண்ணுரம் செயலாக்க மையம் அருகில் துணை சுகாதார நிலையம் கட்டும் பணி | 30.00 |
| 3 | முத்தழகுபட்டி பழைய மகப்பேறு மையத்தில் துணை சுகாதார நிலையம் கட்டும் பணி | 30.00 |
| 4 | மதுரை ரோடு பழைய பம்ப் ரோடு (மதுரை ரோடு – பேட்டை ரோடு சந்திப்பு) துணை சுகாதார நிலையம் கட்டும் பணி | 30.00 |
| 5 | பாஸ்கா மைதானம் இடதுபுறம் அங்கன்வாடி மையம் அருகில் துணை சுகாதார நிலையம் கட்டும் பணி | 30.00 |
| | **மொத்தம்** | **150.00** |

## V. பார்வையாளர் மாடம் கட்டும் பணி (கேலரி)

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | ஆ.எம்.காலனி கூடைப் பந்து விளையாட்டு மைதானத்தில் (கேலரி) பார்வையாளர் மாடம் கட்டும் பணி | 20.00 |
| | **மொத்தம்** | **20.00** |

(ந.க.எண். 8247 / 2019/ இ4 )

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்

2) **பிரதம மந்திரியின் ஜன் விகாஸ் கர்யா கிராம் திட்டத்தின் கீழ் ரூ.990.00 இலட்சம் மதிப்பீட்டில் இப் பணிகளை 60 சதவீத மத்திய அரசு மான்யம் மற்றும் 40 சதவீத மாநில அரசு மான்யம் நிதிப் பகிர்மானத்தின்படி மேற்கொள்ள முன்மொழிவுகளை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திற்கு அனுப்ப மாமன்றம் அனுமதி வழங்கலாம்**

---

**19)** திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலைய முதல் தள தங்கும் விடுதியினை மாநகராட்சிக்கு கூடுதல் வருவாய் உருவாக்கும் வகையில் வணிக வளாகமாக மாற்ற இம்மாமன்றத் தீர்மானம் எண்.7, நாள் 28.2.2019 ல் வழங்கப்பட்டு, உரிய கட்டுமான மாற்றங்கள் செய்து தர வருவாய் ஆய்வாளர் (பொறுப்பு – 1 ) கடிதம் எண். 10193 / 2014 / அ7, நாள் 3.6.2019 ல் கேட்டுக் கொண்டதின்படி, இம்மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானம் எண்.1647, நாள் 10.,7.2019 ல் அனுமதி பெற்று தங்கும் விடுதியினை 28 எண்ணிக்கைகள் கொண்ட வணிக வளாக கடைகளாக மாற்றும் பணி நடைபெற்று வருகிறது. ஏற்கனவே இம்மாநகராட்சியில் தங்கும் விடுதிக்கென ஒரே ஒரு மின் இணைப்பு பெற்று உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. தற்போது செயல்படுத்தப்படவுள்ள 28 எண்ணம் வணிக வளாக கடைகளுக்கென தனித்தனியாக 28 எண்ணம் ஒருமுனை மின் இணைப்புகள் பெறத் தேவையான மின் அமைப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்படி மின் இணைப்புகளுக்காக தரைத்தள பகுதியில் பஸ் பார் பேனல் போர்டு அமைப்பதுடன், உபகரணங்கள் அமைத்து அதிலிருந்து 28 எண்ணம் கடைகளுக்கு கேபிள் அமைப்புடன் மின் பணிகள் மேற்கொண்டு மின் இணைப்புகள் பெறப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணிகளுக்கென தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 271 / 2013 / இ4)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) மாநகராட்சி பொது நிதி 2019-20 ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதி அனுமதியை எதிர்நோக்கி எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

20) திண்டுக்கல் மாநகராட்சியில் பதிவுரு எழுத்தராகப் பணிபுரிந்து கடந்த 31.12.2016 ல் ஓய்வு பெற்ற திரு.எ. மனோகரன் என்பவருக்கு 5வது ஊதியக் குழு நிலுவைத் தொகை ரூ.2121/-ம் ( 1.6.88 – 31.5.89 முடிய) 1.6.89 முதல் 31.12.2016 முடிய உள்ள காலத்திற்குரிய வட்டித் தொகை ரூ.25446/-ம் சேர்த்து ரூ.27567/-ம் பொது நிதியிலிருந்து வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண். 11558 / 2019 / சி 1)

**<u>அ.குறிப்பு</u>**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**21)** இம் மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2017-18 ன் கீழ் சாமியார் தோட்டம் பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டும் பணிக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 17.8.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்திருந்த திரு.எஸ்.அமல்ராஜ் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட பகுதியில் இரண்டு முறைகள் பணிகள் மேற்கொள்ள முற்பட்டபோது அப்பகுதி மக்கள் தடை செய்து அருகாமையில் Gasifier Crematorium த்திற்கு பின்புறமாக பயன்படுத்தாத இயலாத நிலையில் உள்ள சுகாதார வளாகத்தினை மராமத்துப் பணிகள் மேற்கொண்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், புதிய சுகாதார வளாகம் அப்பகுதியில் தேவையில்லை என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்காணும் பணியை ரத்து செய்யவும், அதற்குப் பதிலாக வார்டு எண்.43 ல்மேட்டுப்பட்டி 13 வது சந்தில் ஆண்களுக்கான நவீன சுகாதார வளாகம் கட்டி தருமாறு அப்பகுதி மக்கள் கேட்டுக் கொண்டதின்பேரில் மேற்படி இடத்தில் கழிப்பறை கட்டவும், சாமியார் தோட்டத்தில் சுகாதார வளாகம் கட்டும் பணியை ரத்து செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், பணியின் அவசர அவசியம் கருதியும், மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலதாமதம் மற்றும் புதிய விலை விகிதத்தினால் ஏற்படும் கூடுதல் செலவினத்தினை கருத்தில் கொண்டும் இப் பணியினை ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த திரு.எஸ்.அமல்ராஜ் ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் பணியினை மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 7951 / 2014 / இ 4)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) தூய்மை இந்தியா திட்டம் 2017-18 ன் கீழ் சாமியார் தோட்டத்திற்குப் பதிலாக மேட்டுப்பட்டி 13 வது சந்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதி அனுமதியை எதிர்நோக்கி எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்

---

22) அரசாணை நிலை எண். 37 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 13.04.2017, அரசாணை எண்.191 நகராட்சி நிவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.05.2017 மற்றும் திட்ட இயக்குநர், தூய்மை இந்தியா திட்டம் / நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.26458/2016/தி-2 நாள் 29.05.2011ன்படி இம்மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண். 784 நாள் 29.08.2017ன்படி இம்மாநகராட்சி 48 வார்டுகளிலும் பொது மக்களிடம் திறந்த மலம் கழித்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், திடக் கழிவுகளைக் குறைத்திடும் வகையில் மறு சுழற்சி மேற்கொள்ளும் விதமான விழிப்புணவு மற்றும் தனி நபர் கழிப்பிடங்கள் பயன்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு பணிகள் ஒப்பந்த அடிப்படையில் ஸ்கை மேன் பவல் ஏஜென்சீஸ், திண்டுக்கல் மூலம் 24 பரப்புரையாளர்கள் மற்றும் 8 பரப்புரையாளர்களுக்கு 1 மண்டல மேற்பார்வையாளர் வீதம் 03.09.2017 முதல் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேலும், 13.11.2018ம் தேதிய உத்திரவின்படி, மேற்படி பணிக்காலத்தினை 03.09.2019 முடிய பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது மேற்படி பணி ஒப்பந்த காலம் முடிவுற உள்ளதைத் தொடந்து, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக செயல்முறை ஆணை ந.க.எண்.23458-1/2016/பி-1 நாள் 11.09.2019ம் தேதிய உத்திரவில் மேற்படி பணிக்கான ஒப்பந்த காலத்தினை ஏற்கனவே பணி மேற்கொள்ளப்பட்டு வரும் ஏஜென்ஸி நிறுவனத்திற்கு மீளவும் 31.03.2020 முடிய கால நீட்டிப்பு செய்தும், அதற்கான செலவினத்தை தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளலாம் எனவும் உத்திரவிடப்பட்டுள்ளது.

எனவே, இம்மாநகராட்சியில் மேற்படி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு குறித்த பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஸ்கை மேன் பவர் ஏஜென்ஸி நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள

நிபந்தனைகளுக்குட்படுத்தி, ஒப்பந்த காலத்தினை 31.03.2020 முடிய பணி நீட்டிப்பு செய்து கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

(ந.க.எண்.8855/2017/எச்2).

<u>அலுவலகக் குறிப்பு ..</u> மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

23) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.8009/2016/ஜே-1 நாள் 04.11.2016 மற்றும் 28.06.2017ம் தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுரைகள், அரசு தலைமைச் செயலர், சென்னை அவர்களின் அனைத்து துறை கூட்ட அறிக்கை நாள் 14.03.2019, மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.141/2018/அ6 நாள் 05.04.2019 மற்றும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், அரசு முதன்மைச் செயலர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரை நாள் 29.08.2019ன்படி, இம்மாநகராட்சி பகுதிகளில் கொசுவினால் பரவக்கூடிய நோய்களை தடுக்கும் பணிகளுக்கு 48 வார்டுகளிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, 300 வீடுகளுக்கு 1 நபர் என்ற வீதத்தில் (இம்மாநகராட்சியின் மொத்த மக்கள் தொகையான 2,07,307க்கு (2011 சென்சஸ்) உட்பட்ட 53,573 குடியிருப்புகளுக்கு) 173 நபர்கள் தேவைப்படுவதால், 173 தற்காலிக மலேரியா களப்பணியாளர்களை திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2018-19ம் ஆண்டு தினக்கூலி நிர்ணயத்தில் நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 296/- என ஒப்பந்த அடிப்படையில், திரு. ராமலிங்கம், PWD கான்ட்ராக்டர், அய்யம்பாளையம், திண்டுக்கல் என்பவர் மூலமாக 26.08.2019 முதல் 30 நாட்களுக்கு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பணி ஒப்பந்த காலம் 24.09.2019 உடன் முடிவுறும் நிலையில் உள்ளதால், தற்போது பருவ மழைக் காரணமாக தீவிர பணி மேற்கொள்ளும் பொருட்டு, மேற்படி பணி ஒப்பந்த காலத்தினை மேலும் 30 நாட்களுக்கு ஏற்கனவே ஒப்பந்த பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திரு. ராமலிங்கம், PWD கான்ட்ராக்டர், அய்யம்பாளையம், திண்டுக்கல் ஒப்பந்ததாரருக்கு பணி நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்காகும் செலவுத் தொகை ரூ.19,00,000/- (ரூபாய் பத்தொன்பது லட்சம்)ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது (ந.க.எண்.7983/2019/எச்2).

**அலுவலகக் குறிப்பு**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் பணி மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்

---

24) இம்மாநகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனம் **TN 57 AF 4941** வாகனத்திற்கு தகுதிச் சான்று முடிவடைவதால், மேலும் ஓராண்டிற்கு தகுதிச் சான்று பெறுவதற்கும், வாகனத்தின் பழுதுகளை சரி செய்வதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.18000/-க்கு (ரூபாய் பதினெட்டாயிரம் மட்டும்) அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.9339/2019/எச்1).

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

25) இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் செயல்பட்டு வரும் 19 வாகனங்களில் தற்போது 6 நிரந்தர ஓட்டுநர்கள் மற்றும் பணி மாற்று அடிப்படையில் 3 ஓட்டுநர்கள் மொத்தம் 9 ஓட்டுநர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மீதமுள்ள வாகனங்களை இயக்குவதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஊதிய நிர்ணய அளவுகோலின்படி ஒப்பந்தப்புள்ளி பெற்று ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக ஓட்டுநர்கள் நியமனம் செய்து மேற்கொள்ளப்பட்ட பணி கடந்த 30.09.2019 உடன் முடிவடைந்தது. எனவே 2019-20ன் தரவிலை அடிப்படையில் வரும் 01.10.2019 முதல் மேலும் 6 மாத காலத்திற்கு ஏற்கனவே பணி மேற்கொள்ளப்பட்ட தி/வா திரு. ராமலிங்கம் PWD காண்ட்ராக்டர், அய்யம்பாளையம் நிறுவனத்திடமிருந்து வெளி முகமை ஒப்பந்தம் மூலம் பணியாளர்களை விநியோகம் செய்யும் பணியை நீட்டிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 (ரூபாய் பத்து லட்சம்) இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது (ந.க.எண்.1320/2019/எச்1).

**அலுவலகக் குறிப்பு**

1. வருவாய் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

26) இம்மாநகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் கீழ்க்கண்ட விபரப்படி வாகனங்களுக்கு தகுதிச் சான்று முடிவடைவதால், மேலும் ஓராண்டடிற்கு தகுதிச் சான்று பெறுவதற்கும், வாகனத்தின் பழுதுகளை ச செய்வதற்கும் கீழ்க்கண்ட விவரப்படி ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.2,42,000/-ற்கு (ரூபாய் இரண்டு லட்சத்து நாற்பத்தி இரண்டாயிரம்) அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண்.. | வண்டி எண். | வேதகுதிச் சான்று முடிவுறும் தேதி | வேஉத்தேச தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | TN 57 BE 2658 | 23.11.2019 | 80000 |
| 2 | TN 57 BE 2647 | 23.11.2019 | 75000 |
| 3 | TN 57 BE 2607 | 23.11.2019 | 16000 |
| 4 | TN 57 BE 2598 | 23.11.2019 | 16000 |
| 5 | TN 57 BE 2637 | 23.11.2019 | 16000 |
| 6 | TN 57 BE 2621 | 23.11.2019 | 16000 |
| 7 | TN 57 BE 2661 | 23.11.2019 | 23000 |
| | | மொத்தம் | 2,42,000 |

(ந.க.எண்.10242/2019/எச்1).

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. வருவாய் நிதியிலிருந்து மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

27) இம்மாநகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு உரக்கிடங்கில் இயங்கி வரும் ஜே.சி.பி. வாகனத்தினை தினசரி பணிமேற்கொள்ள பயன்படுத்தப்படுவதால்

வாகனத்தின் முன் பக்க டயர்கள் பின் பக்க டயர்கள் பழுதடைந்து அடிக்கடி பஞ்சராகிவிடுகிறது. எனவே, மேற்படி வாகனத்திற்கு ஜெயராஜ் ஆட்டோ ஏஜென்ஸி, மதுரை நிறுவனத்திடமிருந்து 4 டயர்கள் வாங்குவதற்கு ரூ.85,276/-, புதிதாக பேட்டரி மற்றும் ரேடியேட்டர் வாங்கி பொருத்திக் கொள்வதற்கு ரூ.57,295/- ஆக மொத்தம் ரூ. 1,42,571/-, அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 1,43,000/- (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்தி மூன்றாயிரம்)ற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.12716 /2017/எச்1).

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

28) இம்மாநகராட்சியின் வருவாய் பிரிவிற்கு 2019-20ம் ஆண்டிற்கு வழக்கு கட்டண செலவினங்களுக்கு உத்தேச செலவினம் ரூ.2,00,000/- (இரண்டு இலட்சத்திற்கு மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.7226/2016/அ1)

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத் தொகை மாநகராட்சியின் 2019-20ம் ஆண்டின் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

---

29) அரசாணை எண். 186, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 22.12.2015 இல் திண்டுக்கல் மாநகராட்சிப் பணியாளர்களை பணி ஈர்ப்பு செய்து ஆணையிடப்பட்டதில், நகராட்சிப் பணியில் வகுப்பு 2 ல் (Class II ) பணியாற்றிய திரு.எஸ்.வில்லியம் சகாயராஜ் என்பவரை கண்காணிப்பாளர் பதவியில் ஈர்க்கப்பட்டு பணி புரிந்து வருகிறார். அவ்வாறு கண்காணிப்பாளர் பதவியில்

**ஈர்க்கப்பட்டு சுமார் 5 வருடங்கள் கடந்து விட்ட நிலையில் எவ்வித பதவி உயர்வுமின்றி அதே நிலையில் பணிபுரிந்து வருவதாகவும், நகராட்சிப் பணியில் பணிபுரிந்திருந்தால், இரண்டு நிலைகளில் பதவி உயர்வு கிடைத்திருக்கும் எனவும், தற்போது பணியாற்றி வரும் மாநகராட்சி கண்காணிப்பாளர் பதவிக்கு இணையான நகராட்சிப் பணிக்கு அதே பணி மூப்பின் அடிப்படையில் ஈர்த்துக் கொள்ள அரசுக்கு பரிந்துரை செய்யுமாறு இம்மாநகராட்சி கண்காணிப்பாளர் திரு.எஸ்.வில்லியம் சகாயராஜ் விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி விண்ணப்பத்தினை நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுச் செயலாளருக்கு அனுப்பி வைத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 10946/ 2019 / சி 1)**

**<u>அலுவலக குறிப்பு..</u>**

**மாமன்றம் அனுமதிக்கலாம்.**

---

30) திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு குடிநீர் லாரி வாகன எண். டி.என்.57.எ.2186 க்கு 2019-2020 ம் ஆண்டிற்கு தகுதிச்சான்று புதுப்பிக்க பராமப்புப் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட இரு நிறுவனங்களிடமிருந்து 12.9.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1) குமார் ஆட்டோ கேர் - ரூ.59950/-
2) கே.எம்.எ. மோட்டார்ஸ் - ரூ.64800/-

மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண். 8896 / 2019 / இ3)

**<u>அ.குறிப்பு</u>**

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ரூ.59950/- க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

---

31) திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு குடிநீர் லாரி வாகன எண். டி.என்.57.எ.2782 க்கு 2019-2020 ம் ஆண்டிற்கு தகுதிச்சான்று புதுப்பிக்க பராமப்புப் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட இரு நிறுவனங்களிடமிருந்து 12.9.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1) குமார் ஆட்டோ கேர் - ரூ.59800/-
2) கே.எம்.எ. மோட்டார்ஸ் - ரூ.64900/-

மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 8897 / 2019 / இ3)

**<u>அ.குறிப்பு</u>**

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ரூ.59800/- க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

---

32) திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு குடிநீர் லாரி வாகன எண். டி.என்.57.எ.3210 க்கு 2019-2020 ம் ஆண்டிற்கு தகுதிச்சான்று புதுப்பிக்க பராமப்புப் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட இரு

நிறுவனங்களிடமிருந்து 12.9.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1) குமார் ஆட்டோ கேர் - ரூ.59950/-
2) கே.எம்.எ. மோட்டார்ஸ் - ரூ.65100/-

மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண். 8895 / 2019 / இ3)

**<u>அ.குறிப்பு</u>**

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ரூ.59950/- க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

---

33) **இம்மாநகராட்சிக்குட்பட்ட 48 வார்டுகளிலும் பொது சுகாதாரப் பணிகளுக்கு தேவையான கிருமி நாசினிகளான நீர்த்த சுண்ணாம்புத்தூள், பினாயில் மற்றும் பிளீசிங் பவுடர் ஆகியவற்றை கொள்முதல் செய்து, எதிர்வரும் வடகிழக்குப் பருவ மழை காலத்திற்கு இருப்பு வைத்துக்கொள்ள வேண்டியுள்ளது. தற்போது கிருமிநாசினிகளின் இருப்பு ஓரிரு மாதங்களுக்கு மட்டுமே உள்ளதால், மழைவெள்ள பாதிப்பு காலங்களில் தொற்று நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவும் மற்றும் தூய்மை இந்தியா திட்ட இயக்கப் பணிகளில் பயன்படுத்தப்படவும் 2019-20ம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட அளவிலான கிருமிநாசினிகள் ஓராண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்குண்டான தோராய செலவு தொகை ரூ.9,80,000/-க்கு**

இம்மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரி பொருள் வைக்கப்படுகிறது.

<u>தேவைப்படும் கிருமிநாசினிகளின் அளவு (ஓராண்டிற்கு)</u>

| வ.எண். | பொருள் | அளவு |
|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்புத் தூள் | 50000 கிலோ |
| 2 | பிளிசீங் பவுடர் | 10000 கிலோ |
| 3 | பினாயில் | 500 லிட்டர் |

<u>ந.க.எண்.9232/2019/எச2</u>

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் இம்மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்

---

34) இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 திருச்சி சாலையில் அமைந்துள்ள அரசு பொது மருத்துவமனையில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் நகர்ப்புற வீடற்ற ஏழைகளுக்கான திட்டத்தில் Shelter for Urban Homeless (SUH) தலைப்பின் கீழ் மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளை பராமரிக்க வரும் பராமரிப்பாளர்கள் அதாவது 50 பயனாளிகள் தங்குவதற்கான சிறப்பு தங்கும் விடுதியினை (Special Shelter) இம்மாமன்ற தீர்மான எண். 1304, நாள் 28.09. 2018ன்படி, ஏற்கனவே இம்மாநகராட்சிக்குச் சொந்தமான பாரதிபுரம் நகர்ப்புற வீடற்ற ஏழைகளுக்கான திட்டத்தன் கீழ் இயங்கி வரும் காப்பக பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் DEED Trust எனும் தொண்டு நிறுவனத்திற்கே மேற்படி சிறப்பு தங்கும் விடுதியின் பராமரிப்பு பணி மேற்கொள்ள 01.10.2018 முதல் பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி பணிக்காலம் 30.09.2019 உடன் ஓராண்டு முவடைவதால், மேற்படி பராமரிப்பு பணியினை அடுத்த ஓராண்டிற்கு (01.10.2019 முதல் 30.09.2020 வரை) ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி DEED

Trust, திண்டுக்கல் நிறுவனத்திற்கு புதுப்பித்து வழங்கிட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது (ந.க.எண்.745/2015/எச்2).

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் பணி மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்

---

35) இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள 15 பிரிவுகள் மற்றும் உரக்கிடங்கிற்கு அன்றாடப் பயன்படுத்தப்படும் தளவாட சாமான்கள் 2016-17ம் ஆண்டு கொள்முதல் செய்து வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது. தற்போது தளவாட சாமான்கள் இருப்பு ஏதுமில்லை. அன்றாடம் பொது சுகாதாரப் பணிகள் தடையின்றி நடைபெறவும், சுகாதாரத்தைப் பேணிக் காக்கும்பொருட்டு 2019-20ம் ஆண்டிற்கு தேவையான உரக்கிடங்கு மற்றும் 15 பிரிவுகளில் வரப்பெற்ற தேவைப்பட்டியலின் அடிப்படையில் தளவாட சாமான்கள் கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 9,50,000/-ஐ (ரூபாய் ஒன்பது லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.6504/2017/எச்2).

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் பணி மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்

---

36) இம் மாநகராட்சியில் கல்வி நிதி 2019-20 மற்றும் வருவாய் நிதி 2010-20 ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள கீழ்க்காணும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூபாயில் |
|---|---|---|
| | **கல்வி நிதி 2019-2020** | |
| 1 | சௌராஷ்டிராபுரம் ஆரம்பப் பள்ளியில் மராமத்து செய்யும் பணி | 400000 |
| 2 | பூச்சிநாயக்கன்பட்டி ஆரம்பப் பள்ளியில் மராமத்து செய்யும் பணி | 400000 |
| | **வருவாய் நிதி 2019-20** | |
| 3 | பாரதிபுரம் நகர்ப்புற வீடற்ற ஏழைகளுக்கான தங்கும் விடுதி மராத்துப் பணி | 300000 |
| 4 | வார்டு எண்.43, குட்டைக்குளம் ரோட்டில் மழைநீர் வடிகால் கட்டும் பணி | 1000000 |

( ந.க.எண். 11658 / 2019/ இ 4)

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

37) இம் மாநகராட்சியில் கல்வி நிதி 2019-20 மற்றும் வருவாய் நிதி 2010-20 ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள கீழ்க்காணும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூபாயில் |
|---|---|---|
| | **கல்வி நிதி 2019-2020** | |
| 1 | நேருஜி நினைவு மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் மராமத்து செய்யும் பணி | 1500000 |
| | **வருவாய் நிதி 2019-20** | |
| 2 | பேருந்து நிலைய கழிப்பறைகளுக்கு தண்ணீர் வசதி செய்யும் பணி | 1000000 |

| | | |
|---|---|---|
| 3 | ஏ.எம்.சி சாலை, ரவுண்ட் ரோடு திருநகர் பகுதி மற்றும் முக்கிய சாலைகளில் சாலைகளை சீரமைக்கும் பணி | 1000000 |
| 4 | பழைய அலுவலக கட்டிடத்தை கணினி வரி வசூல் மையமாக மாற்றும் பணி | 1000000 |

( ந.க.எண். 11658 / 2019/ இ 4)

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**38)** இம் மாநகராட்சியில் வருவாய் நிதி 2019-20 ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள கீழ்க்காணும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூபாயில் |
|---|---|---|
| | **வருவாய் நிதி 2019-20** | |
| 1 | திண்டுக்கல் மாநகராட்சி காமராஜர் பேருந்து நிலைய இரண்டாம் தளத்தில் கடைகள் கட்டும் பணி – ஏ பிளாக் | 4950000 |
| 2 | திண்டுக்கல் மாநகராட்சி சிலுவத்தூர் சாலை மற்றும் ஏஎம்சி சாலைக்கு இடைப்பட்ட அம்மா உணவகத்திற்கு அருகில் வணிக வளாகம் கட்டும் பணி | 4950000 |

( ந.க.எண். 11658 / 2019/ இ 4)

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

39) திண்டுக்கல் மாநகராட்சி பொதுப் பிரிவு பணியாளர்களால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் கீழ்க்கண்ட மனுதாரர்களால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதில் மாநகராட்சி ஆணையர் சார்பாக ஆஜராகிய வகையில் வழக்கு கட்டணம் ரூ.7500/- வீதம் 4 வழக்குகளுக்கு ரூ.30,000/- ம் வழக்கறிஞர் திரு.ஜெ.லாரன்ஸ் என்பவருக்கு வழங்கிட அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | மனுதாரர் பெயர் | W.P. எண் | வழக்கு விபரம் |
|---|---|---|---|
| 1 | திரு.சி. விஜயராகவன், உதவியாளர் | 11316 / 2019 | உதவியாளர்களின் பணி மூப்பு பட்டியல் திருத்தி வெளியிடக் கோரி |
| 2 | திரு.சி. விஜயராகவன், உதவியாளர் | 14351 / 2019 | திரு. சாரங்க சரவணன் உதவியாளருக்கு வழங்கப்பட்ட கண்காணிப்பாளர் பதவியினை ரத்து செய்திடக் கோரி |
| 3 | திரு.கலைமாறன், முன்னாள் வருவாய் உதவியாளர் | 5253 / 2010 | நிரந்தரப் பணி நீக்கம் செய்யப்பட்ட உத்தரவினை ரத்து செய்திடக் கோரி |
| 4 | திரு.ராஜேஷ்குமார், த/பெ.முருகேசன், துலக்குந | 19863 / 2017 | கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கிடக் கோரி |

(ந.க.எண்.7129/2019/ சி 1

<u>அலுவலக குறிப்பு</u>

மாமன்றம் அனுமதிக்கலாம்

---

40) அரசாணை நிலை எண். 125, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 28.5.2019 ல் திண்டுக்கல் மாநகராட்சிக்கு பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் ரூ.40.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அத் திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள மாமன்ற அனுமதி பெறப்பட்டது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூபாயில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.14, கோபால் நகரில் சிறுமின் விசை இறைப்பான் அமைக்கும் பணி | 300000 |
| 2 | வார்டு எண்.44, சிகேசிஎம் காலனியில் சிறுமின் விசை இறைப்பான் அமைக்கும் பணி | 300000 |
| 3 | வார்டு எண்.46, மொட்டனம்பட்டி ரோடு 5வது தெருவில் சிறுமின் விசை இறைப்பான் அமைக்கும் பணி | 300000 |
| 4 | வார்டுஎண்.34, வேடபட்டியில் சிறுமின் விசை இறைப்பான் அமைக்கும் பணி | 300000 |
| 5 | வார்டு எண்.30, திருமலைசாமிபுரத்தில் சிறுமின் விசை இறைப்பான் அமைக்கும் பணி | 300000 |
| 6 | வார்டு எண்.26, நெட்டுத் தெருவில் சிறுமின் விசை இறைப்பான் அமைக்கும் பணி | 300000 |
| 7 | வார்டு எண்.6, கிருஷ்ணாராவ் தெருவில் சிறுமின் விசை இறைப்பான் அமைக்கும் பணி | 300000 |
| 8 | வார்டு எண்.40, பாறைப்பட்டியில் சிறுமின் விசை இறைப்பான் அமைக்கும் பணி | 300000 |
| 9 | வார்டு எண்.40, எம்டிஎஸ் காலனியில் சிறுமின் விசை இறைப்பான் அமைக்கும் பணி | 300000 |
| 10 | வார்டு எண்.27, காந்திஜி புது ரோட்டில் சிறுமின் விசை இறைப்பான் அமைக்கும் பணி | 300000 |
| 11 | ஆத்தூர் காமராஜர் அணையில் திறந்தவெளிக் கிணறு தூர் வாரும் பணி | 1000000 |

மேற்படி பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு நீர் ஆதாரத்தினை கண்டறிந்து சிறுமின் விசை இறைப்பான் அமைக்க நில நீர் வல்லுநரைக் கொண்டு ஆய்வு செய்த போது வ.எண்.7 ல் நீர் ஆதாரம் சரிவர கிடைக்கப் பெறாததால் சிறு மின் விசை இறைப்பான் இல்லாத மற்றும் நிலத்தடி நீர் ஆதாரமுள்ள கீழ்க்காணும் இடத்தில் அப் பணியை மேற்கொள்ளவும், மேலும் இப்

பணி வறட்சி நிவாரணப் பணி என்பதாலும், மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவதினால் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டும், பணியின் அவசர அவசியம் கருதியும் அதே ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை விகிதத்தில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணி மேற்கொள்ள அனுமதி பெறப்பட்ட பணி விபரம் | மாற்று இடத்தில் பணி மேற்கொள்ள வேண்டிய விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூபாயில் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.6, கிருஷ்ணாராவ் தெருவில் சிறுமின் விசை இறைப்பான் அமைக்கும் பணி | வார்டு எண்.12, எம்.ஜி.ஆர். நகரில் சிறுமின் விசை இறைப்பான் அமைக்கும் பணி | 300000 |

(ந.க.எண். 4311/ 2014/ இ4 )

<u>அலுவலக குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) இப் பணி வறட்சி நிவாரணப் பணி என்பதாலும், மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவதினால் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டும், பணியின் அவசர அவசியம் கருதியும் மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்தம் பெற்ற ஜெகதீஸ்வரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை விகிதத்தில் மாற்று இடத்தில் பணி மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்